**இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்-2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற உயர்ந்தபட்ச தகவல்கற்கும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரைத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் இறக்குமதி பட்டியல்களின் மீது செலுத்தப்பட்ட முற்பணங்களின் மீதி ரூபா 34,958,636 ஆகக் காணப்பட்டது. இதில் 04 முதல் 05 வரையான ஆண்டுகளுக்கிடையில் ரூபா 774,445 தொகையும் 05 முதல் 06 வரையான ஆண்டுகளுக்கிடையில் ரூபா 3,475,434 தொகையும் 06 முதல் 07 வரையான ஆண்டுகளுக்கிடையில் ரூபா 28,758,928 தொகையும் 07 முதல் 08 வரையான ஆண்டுகளுக்கிடையில் ரூபா 1,949,829 தொகையுமாக அறவிடப்பட முடியாதிருந்ததுடன் இதற்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. இந்த

அனைத்து தொகைகளுக்காகவும் ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் 2006 ஆம் ஆண்டில் ரூபா 208,973,030 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ‘‘விலாசிதா நிவச’’ ரூபா 800,000 தொகையான மாதாந்த வாடகை அடிப்படையில் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2010 யூன் 15 ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு 2010 ஆகஸ்ட் 11 ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டிருந்தது. 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய கடிதத்தின் படி ‘‘விலாசிதா நிவச’’ இற்கான இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் காரியாலயம் அறிவித்திருந்த போதிலும் இது பெறப்பட்டிராததுடன் ‘‘விலாசிதா நிவச’’ இன் கிரயமான ரூபா 208,973,030 தொகை பெறவேண்டிய காணிகள் முதலீடாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(பி) பிரிவு | திறைசேரி முறிகளின் அடிப்படையில் ரூபா 1,254,444,675 தொகையும் அமெரிக்க டொலர் நிலையான வைப்புக்களின் அடிப்படையில் மக்கள் வங்கியில் ரூபா 878,000 தொகையும் இலங்கை வங்கியில் ரூபா 1,650,895 தொகையும் யூரோ நிலையான வைப்புக்களில் ரூபா 145,151 தொகையும் ஆன முதலீட்டிற்காக |

| | | |
|---|---|---|
| | | நிதி, திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் ரூபா 25,500,000 தொகையான நிதி தனியார் வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டுகளைப் போல் மீளாய்வாண்டிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 980,000 ஆன பங்களிப்புத் தொகை கூட்டுத்தாபனத்தின் நலன்புரி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2000 சனவரி 31 ஆம் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டுகளைப் போல் மீளாய்வாண்டிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஊழியர்களினால் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியான ரூபா 1,166,498 தொகை கூட்டுத்தாபன நிதியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினர் மீண்டும் குழுக்களாக்கப்பட்டு அதன் பிரகாரம் சம்பளத் திருத்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவு | நிபந்தனைகளுக்கு முரணாக 5 சந்தர்ப்பங்களின் போது 50% இற்கும் 100% இற்கும் இடையிலான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | நி.பி. 1645 (அ) | 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 89,759 செலவில் மேற்கொள்ளப்பட்ட வாகன சேவையிடல் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான விபரம் சம்பவக் |

குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நி.பி. 104(3) இழப்புக்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1. நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவு ரூபா 54,439,370 தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 79,648,411 ஆக இருந்தமையால் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 25,209,041 ஆல் குறைவடைந்திருந்தது. அதற்காக முதலீட்டு வருமானம் ரூபா 21,055,894 ஆலும் வாடகை வருமானம் ரூபா 5,200,000 தொகையாலும் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

வருமான வரிக்கு முன்னரான திரட்டிய தேறிய இலாபம் ரூபா 108,187,543 ஆன போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 30,252,223 ஆன தேறிய இலாபமாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 108,187,543 ஆன மொத்த தேறிய இலாபத்தில் 76% முதலீட்டு வருமானங்களையும் 28% செயற்பாட்டு இலாபத்தினையும் 4% ஏனைய வருமானங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்ததுடன் நாணயமாற்று நட்டம் 8% ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளின் தேறிய இலாபம் 93% ஆல் அதிகரித்தும் மொத்த தேறிய இலாபம் 17% ஆல் குறைவடைந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

**2.2 செயலாற்றல்**

**(அ) 2010 செயற்பாட்டு திட்ட இலக்கை எய்தல்**

பின்வரும் காப்புறுதிப் பத்திரம் பிணை என்பவற்றின் அளவுகளின் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையை அடைய முடியாதிருந்தது.

| | காப்புறுதி பத்திரம் மற்றும் பிணைப் பொறுப்பு வகை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படியான எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| (i) | ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதிப் பத்திரம் | 40 | 21 | 53 |
| (ii) | கப்பலேற்ற முன்னரான பிணைச் சான்றிதழ் | 12 | 10 | 83 |
| (iii) | கப்பலேற்றிய பின்னரான பிணைச் சான்றிதழ் | 12 | 06 | 50 |

மீளாய்வாண்டின் போது ஏற்றுமதி செயலாற்றல் பிணைச் சான்றிதழ் முறைமை மற்றும் விமானப் போக்குவரத்துச் செலவின பிணைச் சான்றிதழ் முறைமை தவிர்ந்த ஏனைய பத்திரங்கள் மற்றும் பிணைகள் விநியோகத்தல் தொடர்பாக இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் அடைந்து கொள்ளப்பட்ட அளவு 50% இலிருந்து 83% வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் காப்புறுதிப் பத்திரங்களையும் பிணைகளையும் குறைத்து வழங்குதல்**

---

விபரம் பின்வருமாறாகும்.

| | | 2010<br>எண்ணிக்கை | 2009<br>எண்ணிக்கை | ஒப்பீட்டு (குறைவு)/ அதிகரிப்பு<br>எண்ணிக்கை சதவீதமாக<br>% |
|---|---|---|---|---|
| (i) | ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதி பத்திரம் | 21 | 25 | (16) |
| (ii) | கப்பலேற்ற முன்னரான பிணைச் சான்றிதழ் | 10 | 13 | (23) |

மீளாய்வாண்டின் போது ஏற்றுமதி செயற்பாட்டு பிணைச் சான்றிதழ் முறைமை, விமானப் போக்குவரத்துச் செலவின பிணைச் சான்றிதழ் முறைமை மற்றும் கப்பலேற்றிய பின்னரான பிணைச் சான்றிதழ் முறைமை தவிர்ந்த ஏனைய பத்திரங்களும் பிணைச் சான்றிதழ்களும் வழங்கப்படுவதற்குரிய சதவீதங்கள் 16% இற்கும் 23% இற்கும் இடையிலான வீச்சில் குறைவைக் காணக்கூடியதாக இருந்தது.

## 2.3 ஆளணிக்கிரயம்

கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 56 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணி 42 பேராக இருந்தமையால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன

## 2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் ரூபா 6,472,750 தொகையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 159,819 அல்லது 2.5% மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவினங்களில் 92% பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், பாதீடானது வினைத்திறனுள்ள ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது

(அ) ஏற்றுமதிப் பட்டியல் மீதான முற்பணங்களை மீளஅறவிடுதல்
(ஆ) காப்புறுதி பத்திரங்கள் மற்றும் உத்தரவதங்கள் வழங்கலும் கோரிக்கைகளுக்கான கொடுப்பனவும்
(இ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை எய்துதல்
(ஈ) மிகையான பணத்தை முதலீடு செய்தல்